# மனித பப்பிலோமா வைரஸ் தடுப்பூசி
# பெற்றோருக்கான தகவல் குறிப்பு

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய தடுப்புமருந்தேற்றல் திட்டத்தின்கீழ் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் வருமுன் காப்பதற்கான மனித பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் 2 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையில் வருடாந்தம் 850 – 950 பெண்கள் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் முற்றிய நிலையில் இனங்காணப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களில் பெரும்பகுதியினர் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதுடன் மிகக் குறுகிய காலத்தினுள் இறந்து விடுகிறார்கள்.

பெரும்பாலான கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்கள் HPV வைரஸ் தொற்றினால் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வைரஸ் ஆனது சாதாரணமாக ஆரம்பத்தில் எவ்வித வெளி அறிகுறிகளையும் ஏற்படுத்தாமல் பெண்ணொருவரின் கருப்பைக் கழுத்திலுள்ள கலங்களினுள் புகுந்து அக்கலங்களின் இயல்புகளை மாற்றி நீண்டகாலப்போக்கில் அக்கலங்களைப் புற்றுநோய்க் கலங்களாக மாற்றிவிடுகின்றது. அப்பெண்ணுக்கு வயதாகும்போது புற்றுநோய்க்கலங்கள் பெருக்கமடைந்து இறுதியில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படும். கருப்பைக் கழுத்து, யோனிவழி போன்றவற்றிலிருந்து எடுக்கப்படும் கல மாதிரிகளில் பரிசோதனையை நடத்துவதன்மூலம் இவ்வைரஸ் தொற்று இனங்காணப்படலாம். இது ஏற்கெனவே உருவாகியுள்ள கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை அதன் ஆரம்ப நிலைகளிலே இனங்கண்டு சிகிச்சையளிப்பதற்காக மட்டுமே பயன்படும் 'ஸ்கிரீனிங்' பரிசோதனையாகும். இதன்மூலம் ஏற்கெனவே உருவாகியுள்ள புற்றுநோய் மேலும் பரவுவதையும் முற்றிய நிலைக்குச் செல்வதையும் தவிர்க்க முடியும். ஆனால் மனித பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசியினை வைரஸ் தொற்று ஏற்பட முன்னர் வழங்குவதன் மூலம் மட்டுமே இப்புற்றுநோய் உருவாக முன்னர் தடுக்க முடியும். எனவே பெண்களுக்கு இத்தடுப்பூசியினை மிக இளம் வயதில் அதாவது வைரஸ் தொற்று ஏற்பட முன்னர் வழங்குவது அவசியமாகும்.

HPV என்பது நூறுக்கும் மேற்பட்ட வைரஸ் உபவகைகளின் கூட்டமாகும். இவற்றில் சில உபவகைகளே கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. 99%ஆன கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்கள் HPV வைரஸ் தொற்றினால் ஏற்படுத்தப்படுகின்ற அதேவேளை அவற்றில் 70% ஆனவை வகை 16, வகை 18 என்பவற்றினால் ஏற்படுகின்றன. HPV தடுப்பூசியானது கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஏற்படுத்தும் பிரதான வகைகளான 16, 18 என்பவை தொற்றுவதைத் தடுப்பதன்மூலம் எதிர்காலத்தில் பெண்களில் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுக்கின்றது. அத்துடன் இத்தடுப்பூசி கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஏற்படுத்தும் HPV வைரஸின் ஏனைய உபவகைகளிலிருந்தும் பாதுகாப்பளிக்கின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசி பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டாலும் பெண்கள் வயதாகும்போது கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கான 'ஸ்கிரீனிங்' பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் பாடசாலைப் பெண்பிள்ளைகளுக்கான HPV தடுப்பூசி வழங்கும் திட்டமானது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையின் தேசிய தடுப்புமருந்தேற்றல் திட்டத்தினுள் 2017 ஆம் ஆண்டு முதல் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கான HPV தடுப்பூசி உள்வாங்கப்பட உள்ளது. இதன்மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்காக பெண்பிள்ளைகளுக்கு இத்தடுப்பூசியை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தடுப்பூசி பாதுகாப்பானதுடன் 2006

ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுப் பாவனையிலுள்ளது. இலங்கையில் இத் தடுப்பூசி 2012 இல் பதிவு செய்யப்பட்டு தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.. எனினும் 2017ஆம் ஆண்டிலிருந்து அனைத்து பெண் சிறார்களுக்கும் இலவசமாக கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

10 வயது பூர்த்தியடைந்த தரம் 6 இலுள்ள எல்லாப் பெண்பிள்ளைகளுக்கும் இத்தடுப்பூசி 2 தடவைகள் 6 மாத இடைவெளியில் வழங்கப்பட வேண்டும். இதனைப் பாடசாலையில் ஏதாவது காரணங்களால் பெறத்தவறும் பட்சத்தில் குறித்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கிளினிக்கில் (MOH கிளினிக்) பெற்றுக்கொள்ளலாம்.

இத்தடுப்பூசி பாடசாலையில் வழமையாக வழங்கப்படும் ஈர்ப்புவலி றொக்சைட் (aTd) தடுப்பூசி வழங்கப்படும் அதே நாளில் சேர்த்து வழங்கப்படக்கூடியது. முதலில் தரம் 6 இலும் பின்னர் 6 மாத இடைவெளியில் தரம் 6 அல்லது தரம் 7 இலும் வழங்கப்படும்.

HPV தடுப்பூசி பாதுகாப்பானது. ஊசி ஏற்றப்படும் இடத்தில் வலி, தோலில் மெல்லிய சிவப்புத்தன்மை போன்ற மிகச்சிறிய பாரதூரமற்ற பக்கவிளைவுகள் ஏற்படலாம். பாரதூரமான பக்கவிளைவுகளுக்கான வாய்ப்பு மிகமிகக் அரிதாக இருப்பதுடன் வேறு நாடுகளில் இதுவரை அவ்வாறான தீயவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

உங்கள் பெண்பிள்ளைகள் கற்கும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரைப் பிள்ளையின் பாடசாலைக்கு வருகைதந்து உங்கள் பிள்ளைக்கு HPV தடுப்பூசியினை இரண்டு தடவைகளும் ஏற்றுமாறு வேண்டுவதன்மூலம் மனித பப்பிலோமா வைரசினால் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயிலிருந்து உங்களது பெண்பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

HPV தடுப்பூசியை இருதடவைகள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் உங்கள் வசதி கருதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு,
தொடர்பு கொள்ளவும்:

- உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி (MOH):
- தொற்றுநோய் விஞ்ஞானப் பகுதி, சுகாதார அமைச்சு, இல. 231, டி சேரம் இடம், கொழும்பு 10.
  தொ.பே. : 0112695112
  ஈ மெயில் : chepid@sltnet.lk
- வாசிக்கவும்
  Human Papillomavirus Vaccine: WHO position paper, October 2014,Weeekly Epidemiological Record, No.43,2014,89,465-492.
  http://www.who.int/wer/2014/wer8943/en/

**தொற்றுநோய் விஞ்ஞான அலகு**
சுகாதார, போசணைமற்றும் சுதேச வைத்திய அமைச்சு
231, டி சேரம் இடம், கொழும்பு 10.

**2017**

.............................................................

හිතවත් දෙමව්පියනි

ගැබ් ගෙල පිළිකා වැළැක්වීම සඳහා හියුමන් පැපිලෝමා වෛරස (HPV) එන්නත ශ්‍රී ලංකාවේ ජාතික ප්‍රතිශක්තිකරණ වැඩසටහනට ඇතුළත් කර ඇත.

6 ශ්‍රේණියේ ඉගෙනුම ලබන සියළුම ගැහැණු දරුවන් සඳහා ලබා දෙන හියුමන් පැපිලෝමා වෛරස එන්නත පිළිබඳ විස්තර පත්‍රිකාව මේ සමඟ එවමි.

අවශ්‍ය එන්නත්කරණය සඳහා දරුවාගේ එන්නත් සටහන් කරනු ලබන "දරුවාගේ සෞඛ්‍ය වර්ධන සටහන් පොත" (Child Health Development Record) ..................................... දින පාසලට එවන මෙන් ඉල්ලමි.

වසංගත රෝග විද්‍යා අංශය
සෞඛ්‍ය අමාත්‍යංශය

සෞඛ්‍ය වෛද්‍ය නිලධාරී කාර්යාලය

---

විස්තර පත්‍රිකාව කියවා HPV එන්නත පිළිබඳව දැනුවත් වුණෙමි. දරුවාගේ සෞඛ්‍ය වර්ධන සටහන් පොත මේ සමග එවමි.

වැදගත් කරුණු

..........................................................................................................................................................................

..................................................
මව/පියා/භාරකරුගේ නම

...............................................
මව/පියා/භාරකරුගේ අත්සන

---

……………………..........…………..

கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோய் தடுப்புக்கான மனித பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி பற்றிய தகவல் தாள் உங்களின் தகவலுக்காக இணைக்கப்பட்டுள்ளது.

HPV தடுப்பூசியானது, தேசிய நோயெதிர்ப்புச்சக்தியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம், தரம் 6 இல் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவிகளுக்கும் 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பாடசாலை சார்ந்த தடுப்பூசியாக வழங்கப்படுகிறது.

HPV தடுப்பூசி வழங்குவதற்கு ………..............……………………. ஆம் திகதி உங்கள் மகளுடன் அவருக்குரிய "பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டையும்" (அவருக்கு வழங்கப்பட்ட தடுப்புமருந்து விவரங்களைக் கொண்ட புத்தகம்) தவறாது அனுப்பிவையுங்கள்.

தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு
சுகாதார அமைச்சு

சுகாதார வைத்திய அதிகாரி

---

நான் கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோய் தடுப்புக்கான மனித பப்பிலோமாவைரஸ் (HPV) தடுப்பூசி பற்றிய தகவல் தாளினைப் பெற்றுக்கொண்டேன். என் மகளுடன், அவருக்குரிய "பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டையும்" அனுப்பிவைக்கின்றேன்.

வேறு குறிப்புகள்
……………………………………………….........................................................................………………………………..

………………………………..........................……

தாய்/ தந்தை/ பாதுகாவலர் இன் பெயர்

……………..............................…………………………

தாய்/ தந்தை/ பாதுகாவலர் இன் கையொப்பம்

…………………………….

An information sheet on Human Papilloma Virus (HPV) vaccine for cervical cancer prevention is attached herewith for your information.

HPV vaccine is given through the National Immunization Programme as a school based vaccination from 2017 for all girls in Grade 6.

Please be kind enough to send “Child Health Development Record“(the booklet containing Immunization details of the child) along with your daughter to the school on …………………………… for HPV vaccination.

Epidemiology Unit
Ministry of Health

Medical Officer of Health

---

I received the information sheet on the Human Papilloma Virus (HPV) vaccine for cervical cancer prevention. Herewith I am sending the Child Health Development Record.

Any Remarks

…………………………………………........................................………………………………………………..

……………………………….........……

Name of the Mother/ Father/ Guardian

……………………………..........................…..

Signature of the Mother/ Father / Guardian